**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

அசல் வழக்கு எண்.62/2025 நாள்– 03.12.2025

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இரா.கோகிலாவாணி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– கிருஷ்ணவேணி(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 01.03.2005 – வாதியின் கிரையப் பத்திரம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.1**

2) 26.02.2020 – வாதியின் கிரையப் பத்திரம் சீர்திருத்த ஆவணம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.2**

3) 24.04.2024 – வாதி நடத்தி வரும் லட்சுமி நரசிம்மர் டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி தொழிலுக்கான உதயம் ரிஜிஸ்ட்ரேஷன் சர்டிபிகேட் – கணினி நகல் – **வா.சா.ஆ.3**

4) 01.6.2024 – வாதி நடத்தி வரும் லட்சுமி நரசிம்மர் டெக்ஸ்டைல்ஸின் கடை வாடகை ஒப்பந்தம் – ஜெராக்ஸ் – **வா.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)**.

5) 19.04.2023 – வாதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் அடமானக் கடன் பதிவு செய்யப்பட்டதற்கான அடமானக் கடன் மெமோரேண்டம் (ஆவண எண்.4178/2023) – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.5**

6) 21.10.2024 – வாதி பிரதிவாதி நிறுவனத்திற்கு பதிவு செய்து கொடுத்த அடமானக் கடன் மெமோரேண்டம் (ஆவண எண்.10425/2024) – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ.6**

7) வாதியின் ஆதார் அட்டை – ஜெராக்ஸ் – **வா.சா.ஆ.7 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).**

**பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**